





**We Shine Academy**™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 16.10.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- விருதுகள்









## தேசிய நிகழ்வுகள்

- **விமானத்தின் எரிபொருளை சேமிக்கும்** நோக்கில், **'டேக்ஸிபாட்'** சேவையை **ஏர் இந்தியா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.** ரோபோ மூலம் இயக்கப்படும் 'டேக்ஸிபாட்' வாகனம், விமானத்தின் முன்சக்கரங்களைப் பற்றிக்கொண்டு ஓடுபாதை வரை அதை இழுத்துச் செல்லும். இதன் மூலம், ஓடுபாதைக்குச் சென்ற பிறகு, விமானத்தின் என்ஜின்களை இயக்கத் தொடங்கலாம்
  - இந்த நடைமுறை காரணமாக எரிபொருள் வீணாவது குறையும்.

- அக்டோபர் 15, 16 ஆம் தேதிகளில் டெல்லியில் நடைபெறவிருக்கும் **25ஆவது தொழில்நுட்ப மாநாடு** மற்றும் **உயர்மட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக டச்சு அரச குடும்பத்தினர் இந்தியா வந்துள்ளனர்.**
  - அரசராக பதவியேற்றதற்குப் பிறகு முதல்முறையாக இந்தியா வந்துள்ள அரசர் வில்லியம் அலெக்சாண்டர் மற்றும் ராணி மேக்ஸிமா ஆகியோருக்கு விமான நிலையத்திலேயே பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **வடக்கு சிரியாவில் குர்து இனத்தவர்களின்** கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது **துருக்கி மேற்கொண்டு வரும் தாக்குதல்** நடவடிக்கைகளைக் **கண்டிக்கும் வகையில்,** அந்த நாட்டின் மீது **அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை** விதித்துள்ளது.
  - இது குறித்து ட்ரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில் சிரியாவில் துருக்கியின் தாக்குதல் நடவடிக்கைகள்

தொடர்ந்தால் அந்நாட்டின் பொருளாதாரத்தை அழிக்க முழுமையாக தயாராக உள்ளேன் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

## நியமனங்கள்

- **தேசிய மருத்துவ ஆணையத்தின் உறுப்பினராக**, தமிழ்நாடு **டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர்.சுதா சேஷய்யன்** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
    - அடுத்த இரு ஆண்டுகளுக்கு அப்பொறுப்பினை அவர் வகிக்க உள்ளார் நாடு முழுவதும் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கான அனுமதி மற்றும் அங்கீகாரம் அளித்தல், மருத்துவ இடங்களை அதிகரிப்பதற்கான ஒப்புதல்களை வழங்குதல் என பல்வேறு முக்கிய நடவடிக்கைகளில் அவர் பங்காற்ற உள்ளார்.

## விருதுகள்

- கனடாவைச் சேர்ந்த எழுத்தாளர் **மார்கரெட் ஆட்வுட்,** பிரிட்டன் எழுத்தாளர் **பெர்னர்டைன் எவரிஸ்டோ** ஆகியோர் இந்த ஆண்டுக்கான கௌரவம் மிக்க **புக்கர் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டள்ளனர்.**
    - இதற்கு முன்னர், கடந்த 1992-ஆம் ஆண்டில் தான் புக்கர் பரிசு இருவருக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது.